**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு. மா. சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் மாசித் திங்கள் 25ம் நாள்
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 09ம் நாள் திங்கட்கிழமை
******

**அசல் வழக்கு எண். 121/2020–ல் இடைமனு எண்.06/2025**

1. சீர்காழி தாலுக்கா நந்தியநல்லூர் கிராமத்தில் இருக்கும அ/மி. பசுபதீஸ்வரர் மற்றும் அ/மி. நந்தியநாத அய்யனார் திருக்கோயில் சார்பாக அதன் பரம்பரை டிரஸ்டி சீர்காழி தாலுக்கா கோவில்பத்து அஞ்சல், அகனி நந்தியநல்லூர், No.531, அக்ரஹாரத்தெருவில் வசிக்கும் இராமசாமி குமாரர் B.அசோகன் ... முதல் மனுதாரர்/வாதி

2. N. பாலசுப்ரமணியன் …… 2ம் மனுதாரர்/புதிய தரப்பினர்

...எதிர்...

G. அமிர்தலிங்கம் ...... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 25.02.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. E. செல்வராஜ் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மேற்படி அசல் வழக்கில் 2ம் மனுதாரர்/புதிய தரப்பினர் பாலசுப்ரமணியன் அவர்களை பிராதில் தரப்பினராக/மனுதாரராக/வாதியாக சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:05:26 +0530

**1. மனுவின் சுருக்கம்**

**(1.1)** இந்த மனுவின் முதல் மனுதாரரானவர் அசல் வழக்கில் வாதி/திருக்கோயில்களின் பரம்பரை டிரஸ்டி என்றும், 2ம் மனுதாரர்/புதிய தரப்பினர் மேற்படி திருக்கோயிலில் பரம்பரை டிரஸ்டியாக ஏற்கனவே உள்ளதாகவும், மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது தாவா வழக்கு சொத்துக்களை பொறுத்து வசப்பரிகாரத்திற்கும், நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும்,

**(1.2)** மேற்படி 2ம் மனுதாரர்/புதிய தரப்பினர் பாலசுப்ரமணியன் மனுதாரரின் சிறிய தந்தை என்றும், மேற்படி திருக்கோயிலில் பரம்பரை டிரஸ்டியும், மனுதாரரின் தந்தையுமான ராமசாமி ஐயர் இறந்த பிறகு, 1ம் மனுதாரரும், 2ம் மனுதாரரும், மேற்படி திருக்கோயிலில் பரம்பரை டிரஸ்டியாக மயிலாடுதுறை இந்து சமய ஆணையர் முன்பாக அசல் மனு எண்: 1/2013ல் மனு தாக்கல் செய்து, மேற்படி மனு 26.12.2016 அன்று உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில் சேர்ந்து பரம்பரை அறங்காவலராக இருந்து வருவதாகவும்,

**(1.3)** இந்த நிலையில் பாலசுப்ரமணியன் கடந்த 17.04.2019ல் தனக்கு வயதாகிவிட்டதாலும், குடும்ப சூழ்நிலை காரணமாகவும் மேற்படி தாவா திருக்கோயிலின் டிரஸ்டி பாத்தியத்தை 1ம் மனுதாரருக்கு டிரஸ்டி பாத்திய விடுப்பு பத்திரம் மூலம் ஒப்படைத்து விட்டதாகவும், அது முதல் 1ம் மனுதாரர்தான் தாவா திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலராக இருந்து வருவதாகவும்,

**(1.4)** இந்த விபரத்தை ஏற்கனவே பிராதில் கூறியுள்ளதாகவும், இருந்தாலும் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் இதனை மறுத்து எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளதால் பின்னிட்டு வீண் விவகாரங்கள் ஏற்படாமல் இருக்க 2ம் மனுதாரர்/புதிய தரப்பினர்– பாலசுப்ரமணியனை மேற்படி வழக்கில் தரப்பினராக/மனுதாரராக/வாதியாக சேர்த்து மேற்படி வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:05:32 +0530

**2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்**

**(2.1)** மனுதாரர் தானே மேற்படி கோயிலில் பரம்பரை trustee என்ற அடிப்படையில் தாக்கல் செய்து விட்டு தற்போது 2ம் மனுதாரர்/வாதியாக பாலசுப்பிரமணியன் என்பவரை இவ்வழக்கில் சேர்க்க வேண்டும் என்று கூறியிருப்பது விந்தையாக உள்ளதாகவும், பாலசுப்பிரமணியன் trustee பாத்திய விடுப்பு பத்திரம் மூலம் மனுதாரர்/வாதிக்கு விட்டுகொடுத்த பிறகு மீண்டும் அவர் trustee யாக செயல்பட முடியாது என்றும்,

**(2.2)** அவ்வாறு வர வேண்டும் என்று சொன்னால் இந்து சமய அறநலத்துறையில் உரிய முறையில் அதிகாரிகளால் அவரை ஒரு trustee யாக உரிய முறையில் நியமனம் செய்யப்பட்ட பிறகு தான் இந்த வழக்கில் அவர் சேர முடியும் என்றும், அப்படியே இந்த வழக்கில் அவர் 2ம் வாதியாக சேர்க்கப்பட வேண்டும் என்றாலும், மனுவை மேற்படி பாலசுப்பிரமணியன் மட்டுமே தாக்கல் செய்ய இயலும் என்றும்,

**(2.3)** மேற்படி பாலசுப்பிரமணியனை இந்த வழக்கில் சேர்க்க வேண்டுமானால் எதிர்மனுதாரராகவும் பிரதிவாதியாகவும் சேர்க்க மட்டுமே மனுதாரர்/வாதி மனு தாக்கல் செய்ய முடியும் என்றும், இந்த வழக்கில் இடைகாலத்தில் ஆணையர் மனு தாக்கல் செய்யப்பட்டு ஆணையரும் சர்வேயரும் இவ்வழக்கு சொத்துக்களை அளந்து, அறிக்கைகள் மற்றும் வரைபடங்களை தாக்கல் செய்துள்ளதாகவும்,

**(2.4)** இவ்வழக்கு தற்போது விசாரணைக்கு தயாராக உள்ள நிலையில் அசல் வழக்கை நடத்தாமல் இழுத்தடிப்பு செய்து எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு அலைச்சலும் மன உளைச்சலும் ஏற்படுத்தும் நோக்கத்தில் மனுதாரர் /வாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், பல ஆண்டுகளுக்கு முன்பு வழக்கு போடப்பட்டு தற்போது இந்த மனுவை தாக்கல் செய்வது ஏற்கதக்கதல்ல என்றும்,

**(2.5)** எனவே மனுதாரரின் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:05:38 +0530

**4.** இம்மனுவில் மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?**

**6. <u>தீர்வு:</u>**

(I) அசல் வழக்கானது 1ம் மனுதாரர்/வாதியால், எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது வசப்பரிகாரம், நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கில் சாட்சிய விசாரணை (trial) துவங்கப்படாத நிலையில், 2ம் மனுதாரர்/புதிய தரப்பினர் பாலசுப்ரமணியன் அவர்களை பிராதில் தரப்பினராக/மனுதாரராக/வாதியாக சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 1,2 மனுதாரர்களால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) **மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்** 2வது வாதியாக சேர்க்க வேண்டிய பாலசுப்ரமணியன் 1ம் வாதியின் சிறிய தந்தை என்றும், மேற்படி 1 மற்றும் 2 மனுதாரர்கள் டிரஸ்டியாக செயல்பட இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அந்த உத்தரவு ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், 2வதாக சேர்க்க வேண்டிய மனுதாரர் தனது உடல்நிலை காரணமாக டிரஸ்டி பாத்திய விடுவிப்பு பத்திரம் எழுதி கொடுத்திருந்தாலும், அது சட்ட ரீதியில் செல்லத்தக்கதல்ல என்றும்,

(iii) இருப்பினும், பின்னிட்டு வழக்கில் வீண் விவகாரங்கள் ஏற்படாமல் இருக்க 2ம் மனுதாரர்/புதிய தரப்பினரை 2வது வாதியாக சேர்த்து தக்க உத்தரவிட வேண்டும் என்றும், இதனால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:05:46 +0530

ஏற்பட போவதில்லை என்றும் வாதிடப்பட்டது.

(iv) **எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்** 2ம் மனுதாரர்/வாதி ஏற்கனவே கோயிலின் டிரஸ்டி பாத்திய விடுப்பு பத்திரம் கொடுத்துவிட்ட பிறகு அவர் டிரஸ்டியாக செயல்பட முடியாது என்றும், அவர் மீண்டும் டிரஸ்டியாக செயல்பட வேண்டும் என்றால் இந்து சமய அறநிலையத்துறையுடைய தகுதி வாய்ந்த அதிகாரிகளால் உரிய முறையில் டிரஸ்டியாக நியமனம் செய்யப்பட்ட பிறகுதான் இந்த வழக்கில் அவர் சேர முடியும் என்றும்,

இருப்பினும், 2ம் மனுதாரர்/வாதியாக சேர்க்கப்பட வேண்டும் என்றாலும், அதற்கான மனுவை பாலசுப்ரமணியன் தான் தாக்கல் செய்ய முடியுமே தவிர, இந்த வழக்கின் வாதி தாக்கல் செய்ய முடியாதென்றும், வேண்டுமென்றால் பாலசுப்ரமணியனை இந்த வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதியாக மட்டுமே சேர்க்க மனுதாரர்/வாதியால் மனு தாக்கல் செய்ய முடியும் என்றும்,

இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்தபிறகு, தற்போது தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனு வழக்கினை இழுத்தடிப்பு செய்து, எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு மன உளைச்சல் ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்று வாதிடப்பட்டது.

**இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.**

**(v)** மனுதாரர் தரப்பில் வாதியும், 2ம் வாதியாக சேர்க்கப்படவேண்டிய நபரும் வாதி திருக்கோயிலின் பரம்பரை டிரஸ்டி என்பதற்காக ம.சா.ஆ.1 ஆவணம் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி பார்த்தால், வாதியும், 2ம் வாதியாக சேர்க்கப்பட வேண்டிய நபரான பாலசுப்ரமணியன் என்பவரும் வாதி திருக்கோயிலின் பரம்பரை டிரஸ்டிகள் ஆவர். அதற்கான உத்தரவு மயிலாடுதுறை இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையரால் அசல் மனு



CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:05:51 +0530

எண். 1/2023ல் கடந்த 26.12.2016ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

(vi) சட்டரீதியாக வாதி திருக்கோயிலின் டிரஸ்டியாக உள்ள 2ம் மனுதாரர்/வாதி தனது டிரஸ்டி பாத்திய உரிமையை 1ம் வாதியிடம் விடுவிப்பு செய்யப்பட்டுள்ளதாக ம.சா.ஆ.2 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.2 ஆவணத்தை கவனமாக பரிசீலனை செய்ததில் அந்த பத்திரமானது இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளால் ஏற்கப்பட்டு, 2ம் மனுதாரர் டிரஸ்டியிலிருந்து விடுவிக்கப்பட்டதாக எந்த உத்தரவும் இல்லை. மேலும், மேற்கண்ட ம.சா.ஆ.2 ஆவணத்தின் கீழாக 2ம் மனுதாரரரை இந்து சமய அறநிலையத்துறை மீண்டும் டிரஸ்டியாக நியமித்தால் மட்டுமே அவர் இந்த வழக்கில் சேர முடியும் என்று எதிர்மனுதாரர் தரப்பில் கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட ம.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்று 2ம் மனுதாரர் டிரஸ்டியிலிருந்து விடுவிக்கப்பட்டதாக அறநிலையத்துறையிலிருந்து எந்த உத்தரவும் இதுநாள்வரை பிறப்பிக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட எதிர்மனுதாரரின் வாதம் நிராகரிக்கப்படுகிறது.

(vii) மேலும் 2ம் மனுதாரர் இந்த வழக்கில் சேர வேண்டுமென்றால் அவர் தான் மனு தாக்கல் செய்ய வேண்டுமே தவிர, மனுதாரர்/வாதி தாக்கல் செய்ய இயலாது என்றும், வேண்டுமானால் மனுதாரர், 2ம் மனுதாரரை எதிர்மனுதாரர்/பிரதிவாதியாக மட்டுமே சேர்க்க மனு தாக்கல் செய்ய முடியும் என்றும் பிரதிவாதி தரப்பில் கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

**உ.ந.மு.ச. கட்டளை 1 விதி 10 (2) ன் கீழ் வழக்கின் எந்த கட்டத்திலும், தரப்பினர்கள் விண்ணப்பத்தின் பேரிலேயோ அல்லது விண்ணப்பம் இல்லாமலேயோ நீதிமன்றத்திற்கு நியாயமாக தோன்றும்போது, புதிய வாதி, பிரதிவாதிகளை நீக்கலாம் அல்லது சேர்க்கலாம்.**

மேற்சொன்ன பிரிவின்படி இந்த 2ம் மனுதாரரை இந்த வழக்கின் வாதியாக சேர்க்க உத்தரவிடுவதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை. மேலும், ம.சா.ஆ.1ன் படி 1ம் வாதி ஏற்கனவே டிரஸ்டியாக



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:05:57 +0530

இருப்பதால் 2ம் மனுதாரரான மற்றொரு டிரஸ்டியை இந்த வழக்கில் 2ம் வாதியாக சேர்ப்பதற்கு இந்த மனுவின் மனுதாரருக்கு எவ்வித தடையும் இல்லை. எனவே, மேற்கண்ட எதிர்மனுதாரரின் வாதம் நிராகரிக்கப்படுகிறது.

(viii) இந்த வழக்கானது வழக்கு விசாரணை துவங்கும் நிலையில் உள்ளது. இந்த நிலையில் 2ம் மனுதாரரை 2ம் வாதியாக சேர்ப்பதால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு வீண் அலைச்சலும், மன உளைச்சலும் ஏற்படும் என்ற எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் வாதம் நிராகரிக்கப்படுகிறது.

எனவே, 2ம் மனுதாரர்/புதிய தரப்பினரை இந்த வழக்கில் 2ம் வாதியாக சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டியது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதால் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

**இறுதியில்,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 09ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:06:02 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

<u>**பின் இணைப்பு**</u>

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> – இல்லை –

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 26.12.2016 | இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, மயிலாடுதுறை முன்பாக அசல் மனு.1/2013ல் ஏற்பட்ட உத்தரவு |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.2 | 17.04.2019 | டிரஸ்டி பாத்திய விடுவிப்பு பத்திரம் அசல் |
| ம.சா.ஆ.3 | 09.08.2019 | வாதிக்கு பிரதிவாதியால் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அசல் |
| ம.சா.ஆ.4 | 17.07.2019 | பிரதிவாதிக்கு வாதி வழக்கறிஞரால் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அசல் |

<u>எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள்</u> – இல்லை –

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> – இல்லை –

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.09 19:06:08 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>நேரிய/வரைவு உத்தரவு</u>**
அசல் வழக்கு எண். 121/2020ல்
இடைமனு எண்.06/2025
நாள்–09.03.2026.